# 5

# ஆராதனை



# WORSHIP

# 5

## எப்படி ஆராதிக்கக்கூடாது?

HOW NOT TO WORSHIP

**1**

நமது சொந்த இன்பத்திற்கென்று ஆராதிக்கக்கூடாது.

**2**

ஆவி ஆவி என்று திருவசனத்தை விட்டுவிடக்கூடாது.

**3**

கருத்துச் செறிவுக்காக ஆவியானவரை விட்டுவிடக்கூடாது.

**4**

பரம பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.

**5**

தனித்து ஆராதிப்பதை அசட்டை செய்யக்கூடாது.

**6**

ஆராதனையிலிருந்து வாழ்க்கையைப் பிரிக்கக்கூடாது.

**7**

பொருட்கள், இடங்கள், நபர்களை விக்கிரகமாக்கக்கூடாது.

**8**

ஒழுங்கும் கிரமமுமின்றி நடந்துகொள்ளக்கூக்கூடாது.

**9**

மற்ற ஆராதனை முறைகளைப் பழிக்கக்கூடாது.

**10**

ஆராதனையின் மறுபக்கத்தை மறந்துவிடக்கூடாது.

# 5

## எப்படி ஆராதிக்கக்கூடாது?

### அறிமுகவுரை

■ பரலோகில் ''பிரசங்கம்'' இருக்காது;
ஏனெனில், நமது அறிவு பூரணப்பட்டிருக்கும்.

அங்கு ''ஜெபமும்'' இருக்காது;
ஏனெனில், நமது தேவையெல்லாம் நிறைவேறியிருக்கும்.

அங்கு ''ஆராதனை'' மட்டுமே இருக்கும்!
வெளி 4:8; 7:9-12,15; 22:3-5
எனவே, இன்று ''சரியாய்'' ஆராதிப்பது பரலோக முன்ருசி!

■ சாத்தான் ஆராதிக்கப்பட விரும்புகிறான் —

☐ அதுவே அவனது வீழ்ச்சிக்குக் காரணம்:
ஏசா 14:12-15 ... *லூசிபர் ... என் சிங்காசனத்தை உயர்த்துவேன்*

☐ ஆண்டவர் இயேசுவிடம் இதை முயற்சித்தான்:
மத் 4:8,9 ... *நீர் என்னைப் பணிந்துகொண்டால் ...*

☐ இரண்டாம் வருகையிலும் இவ்விதமே முயற்சிப்பான்:
2 தெச 2:1,3,4 ... *தேவன்போல தேவாலயத்தில் உட்கார்ந்து ...*

அவனது முயற்சியில் தோல்வியுறும்போது,
உண்மையான ஆராதனையைத் தடுக்கவோ,
திசைதிருப்பவோ வகை தேடுவான் —

ஏனெனில், துதித்தலிலும் ஆராதனையிலும் எங்கும்
புதிய உற்சாகம் காணப்படுகிறது.

தவறானதைச் சரியானதாய்க் காட்டுவதில் சாத்தான் கெட்டிக்காரன்!

ஆராதனையில் உற்சாகம் அவசியம்; ஆனால் வேதாகம
ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்படாவிடில், தேவன் வெறுக்கும்
*''அந்நிய'' அக்கினி* உள்ளே வந்துவிடும் (லேவி 10:1-3)

தேவன் நமது ஆராதனையை அங்கீகரிக்கும்படி
வேதத்திற்குப் புறம்பான செயல்களை
அதிலிருந்து களைந்துவிடுவோம், வாருங்கள்.

## எப்படி ஆராதிக்கக்கூடாது?

### 1. நமது சொந்த இன்பத்திற்கென்று ஆராதிக்கக்கூடாது.

Do not worship for personal enjoyment.

■ ''ஆராதனை எப்படி இருந்தது?''
என்று கேட்டால் வரும் வழக்கமான பதில்கள்:

— பரவசமாய் இருந்தது!
— எனக்கு நன்றாய் இருந்தது!

''எனக்கு'' என்ன **கிடைக்கும்?** — மார்க்கம் உட்பட எல்லாவற்றிலும் எல்லாருடைய இன்றைய மனநிலை இதுவே!

ஆனால் உண்மையான தொழுகை கேட்பது,
''நான் தேவனுக்கு என்ன **கொடுக்க** முடியும்?''
சங் 96:7-9 ... *செலுத்துங்கள் ... செலுத்துங்கள் ...*

(உ-ம்) ''தொழுகை'' என்ற வார்த்தை வேதத்தில் முதலில் வருவது—
(அ) பழைய ஏற்பாட்டில்: ஆதி 22:5
தன் மகனைப் *''பலியிடுவதையே''* ஆபிரகாம் தொழுகையாய்க் கருதினான்.
(ஆ) புதிய ஏற்பாட்டில்: மத் 2:2,11
கிழக்கிலிருந்து வந்த ஞானிகள் வெகுமதிகளைக் *''கொடுத்தனர்.''*

■ மனிதனையல்ல, தேவனையே ஆராதனை மையமாய்க் கொண்டிருக்கவேண்டும்.
''ஆராதனை'' — ''worship'' என்பது ''worthship'' எனும் சொல்லிலிருந்து வருகிறது.
அதாவது, தேவனுக்கு ''உரிய'' கனத்தைச் செலுத்துவது.

துதிக்குப் ''பாத்திரர்'' தேவனே —
(உ-ம்) தாவீது ... 2 சாமு 22:4
*... ஸ்தோத்திரத்திற்குப் பாத்திரராகிய கர்த்தரை ...*
24 மூப்பர் ... வெளி 4:10,11
*... விழுந்து ... தொழுது ... நீர் ... பாத்திரராயிருக்கிறீர் ...*

■ ஜெபித்தல்—நன்றி செலுத்துதல்—ஆராதித்தல் (வேறுபாடு?)

- ☐ ''தேவனே, என்னை இரட்சியும்'' — ஜெபம்
  ''தேவனே, இரட்சித்ததற்காய் நன்றி'' — நன்றி செலுத்தல்
  ''என் இரட்சகராகிய தேவனே, உம்மைத் துதிக்கிறேன்''
  — ஆராதனை
- ☐ ''தேவனே, என்னைக் குணமாக்கும்'' — ஜெபம்
  ''தேவனே, குணமாக்கியதற்காய் நன்றி'' — நன்றி செலுத்தல்
  ''என் பரிகாரியாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறேன்''
  — ஆராதனை

நன்றி செலுத்துதல் — தேவன் என்ன ''கொடுக்கிறார்''
என்பதற்காய்த் துதிப்பது

ஆராதித்தல் — தேவன் யாராய் ''இருக்கிறார்''
என்பதற்காய்த் துதிப்பது

அதாவது, பிரதானமாக ''ஆசீர்வாதங்களை'' அல்ல,
''ஆசீர்வதிக்கிறவரையே'' மையப்படுத்துவது.

☐ சங்கீதக்காரன்

தேவனது *மகிமை* (சங் 8:1; 57:5; 66:2; 96:3; 113:4)

தேவனது *வல்லமை* (சங் 20:6; 62:11; 65:6; 78:26; 150:2)

தேவனது *காருண்யம்* (சங் 23:6; 27:13; 69:16; 86:5; 109:21)

தேவனது *அன்பு* (சங் 6:4; 13:5; 25:10; 36:5; 63:3)

தேவனது *உத்தமம்* (சங் 26:3; 36:5; 71:22; 86:11; 138:2)

☐ தீர்க்கன் ஆபகூக் 3:17,18

*''அத்திமரம் ... **கர்த்தருக்குள்** மகிழ்ச்சி''*

இந்த வார்த்தைகளை *நரம்பு வீணைகளோடு* பாடுங்கள் என்று அவன் சொன்னதிலிருந்து அவனது துதியின் ஆவி தெளிவு.

☐ இதே விதமாய், யோபு 1:20-22

*''பணிந்து ... கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் ...''*

☐ படைப்பை அல்ல, ''படைத்தவரை''

ரோ 1:25 ... *''சத்தியம்* vs. *பொய்''*

- இங்குதான் இசைப்போருக்கும், பாடல் நடத்துவோருக்கும் கூடுதல் கவனமும் பயபக்தியும் தேவை.

  பாடகர்களே, நடிகர்களாகிவிடாதீர்!
  இசைப்போரே, பொழுதுபோக்கிகளாகிவிடாதீர்!

  தொழுகை வேளை தாலந்துகளை வெளிக்கொணர அல்ல ...
  தயவு செய்து, நாடகப் பாவனைகள் வேண்டாம்!

  கவர்ச்சியானது பாடகர் அல்லது இசைப்போர் மீது வந்துவிடக்கூடாது.

  (உ-ம்) 120 ஆசாரியர் பூரிகை ஊதிப் பாடியபோது,
  அவர்கள் மறைக்கப்பட்டனர், தேவ மகிமையே காணப்பட்டது.
  2 நாளா 5:12-14

  இசையோ பாடலோ நன்றாய் இருந்தது என்று யாரும் சொல்லவில்லை; *''கர்த்தர் நல்லவர்''* என்றே சொன்னார்கள்!

- இப்பொழுது ஒரு கேள்வி —

  ஆராதனை வேளையிலும் பின்னரும் நாம் மகிழக்கூடாதா?
  மகிழலாம்! ஆனால் ''நமக்கு'' என்ன கிடைத்தது என்பதைவிட ''தேவன்'' எதைப் பெற்றுக்கொண்டார் என்பதிலேயே மகிழ்ச்சி!

  (உ-ம்) ஏசா 56:7 ... நமது பலிகள் *''அங்கீகரிக்கப்பட்டதாலேயே''* நாம் மகிழுவோம்.

  துப்புரவான தொழுகையைக் கற்றுக்கொள்ளத் திருமறைக்கு இவ்விதம் திரும்புவோம்.

- Isaac Watts (1674-1748) இயற்றிய பாடல் —

  *செலுத்துங்கள் தேவனுக்கே நித்திய மகிமை;*
  *இரக்கமும் சத்தியமும் அவர் வழிகளாம்:*
  *கிருபையின் அதிசயங்கள் உரியவை அவருக்கே,*
  *பாடுங்கள் இரக்கத்தைத் திரும்பத் திரும்ப!*

## 2. ஆவி ஆவி என்று திருவசனத்தை விட்டுவிடக்கூடாது.

Do not sacrifice the Scriptures for the Spirit.

- பழைய ஏற்பாட்டு யூத ஆராதனை **சடங்காச்சாரமானது**.

  கிறிஸ்துவின் மரணம் சடங்காச்சார ஆராதனைக்குச் சாவு மணி —

  *தேவாலயத் திரைச்சீலை இரண்டாய்க் கிழிந்தபோது!* (மத் 27:51)

  ''சடங்காச்சாரத்திலிருந்து'' ''ஆவிக்குரியதாய்'' ஆராதனை
  மாறப்போவதை முன்னறிந்து,
  இயேசு சொன்னது:

  *''ஆவியோடும் உண்மையோடும்''* ஆராதிக்கவேண்டும் (யோ 4:24)

  இவ்வசனத்திலிருந்து ஓர் அம்சம் மட்டும் எடுத்துக்கொண்டோம்—
  அதாவது, *''ஆவியோடு''*

  அடுத்த அம்சத்தையோ மறந்துவிட்டோம் —
  அதாவது, *''உண்மையோடு''* = சத்தியத்தோடு

  அதாவது, நமது ஆராதனை ''ஆவிக்குரியதாய்'' மட்டுமல்ல,
  *''சத்திய வசனத்திற்கு''* இசைந்ததாயும் இருக்கவேண்டும்.
  இயேசு பிதாவிடம்: *''உமது வசனமே **சத்தியம்!**''* (யோ 17:17)

- ஆராதனையானது ''அகத்தூண்டலும்'' ''அறிவுணர்வும்''
  (Inspiration & Information) நிறைந்திருக்கவேண்டும்.

  யாரை ஆராதிக்கிறோம் என **''அறிந்திருக்கவேண்டும்''** (யோ 4:22)

  இந்த அறிவு பிரதானமாய்த் திருமறையிலிருந்தே வருகிறது —

  இயேசு: *''வேத வாக்கியங்கள் என்னைக் குறித்து சாட்சி''* (யோ 5:39)
  *''பிரமாணம் ... தீர்க்கதரிசிகள் ... சங்கீதங்கள் ... என்னைக் குறித்து ...''*
  (லூக் 24:44)

(உ-ம்) திருமறைப் புத்தகங்களில் இயேசு —

| | | |
|---|---|---|
| ஆதியாகமம் | : | பெண்ணின் வித்து |
| யாத்திராகமம் | : | பஸ்கா ஆட்டுக்குட்டி |
| லேவியராகமம் | : | பிரதான ஆசாரியர் |
| எண்ணாகமம் | : | அடிக்கப்பட்ட கன்மலை |
| உபாகமம் | : | தேவனிடமிருந்து வந்த போதகர் |
| தீர்க்கதரிசிகள் | : | சமாதானப் பிரபு |
| மத்தேயு | : | யூதருக்கு ராஜா |
| மாற்கு | : | தேவ தாசன் |
| லூக்கா | : | மனுமகன் |
| யோவான் | : | இறைமகன் |
| நடபடிகள் | : | அறுவடையின் ஆண்டவர் |
| நிருபங்கள் | : | திருச்சபையின் ஆண்டவர் |
| வெளிப்படுத்தல் | : | ராஜாதி ராஜாவாய் நாடுகளின் ஆண்டவர் |

இவ்விதம் தேவனது நூற்றுக்கணக்கான பெயர்களைப் பைபிளில் கண்டுபிடியுங்கள் —
அவற்றை ஒவ்வொன்றாய்த் தியானியுங்கள் —
ஒவ்வொரு நாளும் ஒரு பெயரை வைத்து ஆராதியுங்கள் —
உங்கள் ஆராதனை செழிப்பும் பூரிப்புமாகும்!

திறந்த வேதத்தோடு தேவனை ஆராதியுங்கள்!
ஆராதனைக்கென்று குறிப்பேடு வைத்துக்கொள்வது
*வீணாய் அலப்புவதைத்* தவிர்க்க சிறந்த வழி.

■ திருவசனத்தைப் புறக்கணிப்பது ஆராதனையைப் பயனற்றதாக்கும்.
மத் 15:8,9 ... *மனிதக் கற்பனைகள் திருவுபதேசங்களுக்குப் பதிலாகி ... ஆராதனையை வீணாக்குகின்றன.*
:3 ... பாரம்பரியங்கள் சத்தியத்திற்கு மாற்றாகின்றன.

அதாவது, நமது சொந்த வழிகள், சிந்தைகளால் நிறைந்துவிடுகிறோம்.

இறைவார்த்தைக்கு முதன்மை கொடுக்கப்பட்டால்தான்
இறைவனுக்கு முன் ஆராதனை நறுமணம் வீசும் —

சங் 138:2 ... *''பணிந்து ... **வார்த்தையை**''*

அப்படியே, சங் 33:2-4 ... *''துதித்து ... பாடுங்கள் ... **வார்த்தை** ...''*

■ சில ஆண்டுகளுக்குமுன் ஆராதிப்பது குறைவாகவும்
பிரசங்கிப்பது அதிகமாகவும் இருந்தது;
இப்பொழுதோ இது அப்படியே அடுத்த ஓரத்திற்குச் சென்றுவிட்டது.

கூடுகைகளில் திருவசனத் தியானத்திற்கும் போதனைக்கும் உரிய
நேரத்தைத் தொழுகை திருடிவிடக்கூடாது —

சமநிலைப்படுத்த வேண்டும்: நெகே 9:3
3 மணி நேர வேத வாசிப்பு, 3 மணி நேரத் தொழுகை

தொழுகைதான் திருவசனத்தைக் கேட்க நம்மை ஆயத்தப்படுத்துகிறது
என்று நாம் சொல்லலாம் — உண்மைதான் —
ஆனாலும், இதயம் திருவசனத்தால் நிறைந்திருக்கும்போதுதான்
ஆராதனை கூடுதல் அர்த்தமுள்ளதாகும் —

*''வசனம் பூரணமாக **வாசம்** ... பக்தியுடன் பாடி''* (கொலோ 3:16)

அதாவது, ஏனோதானோ என்றல்ல,
நிதானமாக, நிறைவாக வசனத்தை உட்கொள்ளவேண்டும்.

இதன் வெளிப்பாடு ''வளமான'' ஆராதனையாயிருக்கும் —
*''... சங்கீதங்கள் ... கீர்த்தனைகள் ... ஞானப்பாட்டுகள்''*

இவ்வித ஆராதனை கடவுளுக்கு ''மகிமையும்,''
மனிதருக்குப் ''பக்திவிருத்தியும்'' அளிக்கும்.

கூட்டு ஆராதனையில் இவ்விரு பரிமாணங்களும் இருக்கவேண்டும் —
1 கொரி 14:17

(உ-ம்) ஏசா 6:3
*''ஒருவரையொருவர் நோக்கி, பரிசுத்தர் ... பரிசுத்தர் ... பரிசுத்தர் ...
பூமி ... மகிமை''*

இதே சத்தியம் எபே 5:18,19இலும் வலியுறுத்தப்பட்டுள்ளது —
*''ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி ... கர்த்தரைப் பாடி''*

## 3. கருத்துச் செறிவுக்காக ஆவியானவரை விட்டுவிடக்கூடாது.

Do not leave the Spirit for the content.

- இது முந்திய அத்தியாயத்தில் படித்த குறிப்பின் அடுத்த ஓரம். ஒன்றுக்காக ஒன்றைப் பலியாக்கக்கூடாது.

  புதிய ஏற்பாட்டில் அருமையான இரு ஆராதனைப் பகுதிகள் உள்ளன—

  கொலோ 3:16 ... ''திருவசனத்தினால்'' நிறைந்து ஆராதனை
  எபே 5:18-20 ... ''தூயாவியினால்'' நிறைந்து ஆராதனை

  ஆம், ''வசன'' நிறைவற்ற ஆராதனை அர்த்தமற்றது;
  ''ஆவியின்'' நிறைவற்ற ஆராதனை அங்கீகரிக்கப்படமாட்டாது
  (1 கொரி 12:3ஆ)

  பரிசுத்த வேதம் : தொழுகைக்கு விறகு
  பரிசுத்த ஆவி : தொழுகைக்கு நெருப்பு

  பரிசுத்த வேதத்தின் ''சுவாசமே'' பரிசுத்த ஆவியானவர்தான்.
  வெறும் *எழுத்து கொல்லும்; ஆவியோ உயிர்ப்பிக்கும்* (2 கொரி 3:6இ)

- ஆவியானவர் விசுவாசிகளைக் களிப்புடன் ஆராதிக்க நடத்தியதற்கு நடபடிகள் புத்தகத்தில் பல சான்றுகள் உண்டு —

  - ☐ யூதக் கிறிஸ்தவர் (அப் 2:4,11)

    ஏற்கனவே ஆராதித்துக்கொண்டிருந்தவர்கள் (லூக் 24:52,53);
    இப்பொழுதோ ஒரு புதிய பரிமாணம்!

  - ☐ யூதரல்லா தொழுகைக்காரர் (அப் 10:45,46)

    ஆராதிக்க உள்ளான விடுதலையை ஆவியானவர் தருகிறார்.

    ஆங்கிலிக்கன் பின்னணியிலிருந்து வந்த எனது சாட்சி —
    நான் பயன்படுத்திய *பொதுவான ஜெபப் புத்தகம்* கருத்துச் செறிவு நிறைந்தது; ஆனால் என்னில் ஒரு கட்டவிழ்ப்பு தேவைப்பட்டது! தூயாவியானவர் என்னை நிரப்பியபோது அது நிகழ்ந்தது.

- உற்சாகமாய் ஆராதிக்கத் தயக்கங்கள் இருப்பின்,
  விடுதலையோடு துதிப்பவர்களோடு சேர்ந்துகொள்ளுங்கள்.

  சங் 89:15 ... *கம்பீர* ***சத்தத்தை*** *அறியும் மக்கள்!*
  81:1,2 ... *கம்பீரமாய்ப் பாடி* ... ***ஆர்ப்பரியுங்கள்*** ...
  *தம்புரு வாசித்து ... சங்கீதம் பாடுங்கள்!*

  பரலோகில் இடைவிடா துதி சத்தம் கேட்கும் —
  வெளி 8:1 ... *அரை மணி நேர அமைதி* குறிப்பிடப்பட்டுள்ளது!

- நவநாவுகளில் பேசுவது —

  1 கொரி 12:7-10இல் பட்டியலிடப்பட்ட வரங்களில் **தேவனோடு**
  பேசப் பயன்படும் ஒரே வரம் இதுதான்!
  மற்றவை மனிதரை நோக்கியவை.

  இது முக்கியமாகத் தேவனைத் துதிக்கவும், நன்றி செலுத்தவும்
  (1 கொரி 14:17)

  என் தனி ஜெபத்தில் அந்நிய பாஷை பேசுகிறேன் (1 கொரி 14:18,19)

  இது எனக்குப் *பக்திவிருத்தி* உண்டாக்குகிறது
  — அதாவது, உள்ளான விடுவிப்பு தருகிறது (1 கொரி 14:4)

  மக்கள் ஆவியானவரால் நிரப்பப்பட்டபோது அடிக்கடி நவநாவுகளில்
  பேசியதற்கு ஒரு காரணம் இதுவே — (அப் 2:4; 10:46; 19:6)

- தொழுகையில் எப்பொழுதும் பரவசம் வேண்டும் என்பது
  இங்கு பொருளல்ல.

  அது உணர்ச்சிவசத்திற்கு நடத்தலாம், கவனம்!

  *தரிசித்தோ,* உணர்ச்சிகளாலோ அல்ல,
  *விசுவாசித்து நடக்கவே* அழைக்கப்பட்டிருக்கிறோம் (2 கொரி 5:6)

  குறிப்பு என்னவெனில்,
  ஆராதிக்கையில் ஆவியானவரின் ஒத்தாசையை நாடாவிடில்
  செத்த சடங்காச்சாரத்தில் முடிவடைவோம் —

  *... குளிருமின்றி, அனலுமின்றி, வெதுவெதுப்பாய்...* (வெளி 3:15,16)

## 4. பரம பிதாவானவரை மறந்துவிடக்கூடாது.
Do not forget the Father.

- இன்றைய தொழுகைப் பாடல்கள், பல்லவிகள் **பிதாவானவரை** அல்ல, **இயேசுவைக்** குறித்தே இருக்கின்றன.

  ஆனால், பிரதானமாய்ப் ''பிதாவானவரே''
  தம்மைத் *தொழுதுகொள்ளுகிறவர்களைத்* ***தேடுகிறார்*** — யோ 4:23

  விவிலியம் இச்சத்தியத்தை நெடுகவே போதிக்கிறது —

  பிலி 3:3 ... *தேவன் ... ஆவி ... கிறிஸ்து*

  கொலோ 1:5 ... *கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்*

  யாக் 3:9 ... *நமது பிதாவாகிய தேவன்*

- அப்படியானால், தொழுகையில் கிறிஸ்து எங்கு வருகிறார்?

  எபே 5:20 ... *''கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ...''*

  கொலோ 3:17 ... *''கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ...''*

  ஒரு முக்கியமான தத்துவம்: ஏதோ ஒரு வசனத்தின் அடிப்படையிலல்ல, வேதத்தில் **நெடுகவே** போதிக்கப்பட்டிருப்பதிலிருந்துதான் உபதேசம் நிலைநிறுத்தப்படவேண்டும் —

  2 கொரி 13:1,2 ... *இரண்டு மூன்று சாட்சிகள் ...*
  *முன் சொன்னதுபோல ... முன்னறிவித்து எழுதுகிறேன்*

- அப்படியானால் குமாரனாகிய கிறிஸ்துவை
  ஆராதிக்கக் கூடாதென்பதல்ல —

  மாறாக, **முடிவான** ஆராதனை பிதாவானவருக்கே —

  பிலி 2:9-11 ... *பிதாவாகிய* ***தேவனுக்கு*** *மகிமையாக ...*

  எபி 2:12 ... இயேசு தாமும் **பிதாவையே** ஆராதிக்கிறார்

  யோ 14:6 ... இயேசுவே **வழி;**
  முடிவாகப் **போய்ச் சேருவதோ** பிதாவிடம்

ஒருமனப்பாட்டுக் கூறுகள்:

எபே 4:4-6 ... *ஒரே ஆவி ... ஒரே கர்த்தர் ...*

ஆனால் பிதாவானவரைக் குறிப்பிடும்போது,

***"எல்லார் மேலும், எல்லாரோடும், எல்லாருக்குள்ளும்"***

எனவேதான், இறுதிக்கட்டத்தில்,
குமாரன் தாமும் தம்மைப் பிதாவுக்குக் கீழ்ப்படுத்துவார் —
1 கொரி 15:28

- தேவாட்டுக்குட்டியை ஆராதிப்பதாக வெளிப்படுத்துதல் புத்தகத்தில் சொல்லப்பட்டிருப்பது?

வெளி 5:13 ... *சிங்காசனத்தின் மேலிருக்கிறவருக்கும்*
*ஆட்டுக்குட்டியானவருக்கும்*
7:9,10 ... *தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும்*

அதாவது, பரலோகத்தில் கிறிஸ்துவின் நடுவர் பணி முடிவடையும்;
**பின்பு** ஆராதனை பிதாவுக்கும் குமாரனுக்கும்
சேர்த்து ஏறெடுக்கப்படுகிறது.

- எப்படியாயினும், பரிசுத்த ஆவியானவரை ஆராதிக்க எந்தக் குறிப்பும் திருமறையில் தெளிவாகக் கிடையாது —

யோ 16:14 ... *ஆவியானவர் குமாரனை மகிமைப்படுத்துகிறார்.*
17:4 ... *குமாரன் பிதாவானவரை மகிமைப்படுத்துகிறார்.*

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி இம்மூவரும் சரிசமமானவர்கள்;
ஆனால், தெய்வீக வரிசைக் கிரமத்தின்படி, தொழுகையானது
பிரதானமாகப் பிதாவானவரையே நோக்கியிருக்கவேண்டும்.

- ஆராதனை: பிதாவானவரை **நோக்கி,**
குமாரனானவரது **நாமத்தில்,**
ஆவியானவரது **வல்லமையோடு**

(பார்க்க: பக்கங்கள் 92-94)

## 5. <u>தனித்து ஆராதிப்பதை அசட்டை செய்யக்கூடாது.</u>
Do not neglect individual worship.

- ஞாயிறு ஆராதனை, அல்லது துதி ஆராதனைக் கூட்டங்களில் மட்டுமல்ல; கூட்டு ஆராதனைக்கு முன் தனித்து ஆராதிப்பது அவசியம். போதுமான நேரம் தனித்து ஆராதித்துவிட்டு வந்தால்தான் கூட்டு ஆராதனை தடையின்றிக் குதூகலமாயிருக்கும் —

  தனித்து : சங் 34:1,2 ... *கர்த்தரை* ***நான்*** *ஸ்தோத்திரிப்பேன்*
  கூடி : :3 ... ***நாம்*** *அவர் நாமத்தை உயர்த்துவோம்*

  இல்லையேல், பாடல் நடத்துபவர்/சபை மேய்ப்பர் மக்களைத் தொழுகையின் ஆவிக்குள் கொண்டுவரக் கடும் பாடுபடவேண்டும்.

- **தனித்து ஆராதிப்பதை மேம்படுத்துவது எப்படி?**

  **அ)** தொழுகைக்கென்றே ஒரு குறிப்பேடு வைத்துக்கொள்ளுங்கள்.

  — யேகோவாவின் மீட்பின் நாமங்கள்

  *யேகோவா-யீரே* (முன்னேற்பாட்டின் தேவன்)
  *யேகோவா-ஷம்மா* (பிரசன்னம் தரும் தேவன்)
  *யேகோவா-நிசி* (வெற்றி தரும் தேவன்)
  *யேகோவா-ரா* (மேய்ப்பரான தேவன்)
  *யேகோவா-ரப்பா* (குணமாக்கும் தேவன்)

  — கடவுளின் குணாதிசயங்கள்

  *தேவன் அன்பாகவே இருக்கிறார்*
  *தேவன் ஒளியாயிருக்கிறார்*
  *தேவன் இரக்கமுள்ளவர்*
  *கிருபையின் தேவன்*
  *சமாதானத்தின் தேவன்,* முதலியன

— தனி நபர்களுக்குத் தேவன் தம்மைப் பிரதானமாக வெளிப்படுத்திய விதங்கள்:

விடுவிக்கும் தேவன்
உடன்படிக்கையின் தேவன்
வாக்களிக்கும் தேவன்
சேனைகளின் கர்த்தர்
மகிமையின் தேவன் ... முதலியன

— தேவன்: சர்வ வியாபகர், சர்வ வல்லவர், சர்வ ஞானி

இக்குறிப்பேட்டைத் தனி ஜெப நேரங்களில் பயன்படுத்துங்கள்.

**ஆ)** இடைவேளைகளில் மெல்லத் துதியுங்கள் —
சங் 34:1 ... *அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்*

இப்படித்தான் இறைப்பிரசன்னத்தை நாம் முழுமையாய் உணரலாம்—
அப் 2:25,26...*கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக நிறுத்தி*

**இ)** இயற்கையழகை ரசித்து தேவ மகிமையைப் பாருங்கள் —
சங்கீதக்காரன்: சங் 19:1 ... *வானங்கள் தேவ மகிமையை வெளிப்படுத்துகின்றன*

ஒரு பாமாலை — *(O Lord my God ...)*

*என் தேவனே, நான் முற்றும் ஆச்சரியமாய்*
*உம் கிரியை யாவும் நோக்குகின்றேனே;*
*உம் வல்லமை விளங்கும் மின் முழக்கம்*
*வானாதி வெள்ளி காண்பித்திடுதே*

*என் நெஞ்சமே, நீ பாடித் துதிப்பாய் —*
*என் மீட்பரின் மா மேன்மையை ...*

இதற்காக நகர்ப்புறம், ஆற்றோரம், கடற்கரை, மலைப் பகுதி, வயல்வெளி, தோட்டங்கள், காடுகள் போன்ற இடங்களுக்குக் காலை, மாலை உலாவச் செல்லுங்கள். இரவில் விண்மீன்களைக் கவனியுங்கள்.

ஈ) வேண்டுவதைவிடத் துதிப்பதற்குக் கூடுதல் நேரமெடுங்கள் —

(உ-ம்) சங்கீதக்காரன் — ஒரு நாளில் 7 முறை துதி (சங் 119:164)
— 3 முறை வேண்டல் (சங் 55:17)

அதாவது, தேவனைப் போற்ற — 70%
தேவனிடம் கேட்க — 30%

*"**வாங்குவதைவிடக் கொடுப்பதே** பாக்கியம்!"*

■ இப்பயிற்சிகளை நெடுகவே செய்துவாருங்கள்.

இப்படித்தான் பாரம்பரியங்களிலிருந்து
இறைவார்த்தையின் சத்தியத்திற்குள் வர முடியும்.

பைபிள் பாணிக்கு மிஞ்சியது எதுவுமில்லை!

## 6. ஆராதனையிலிருந்து வாழ்க்கையைப் பிரிக்கக்கூடாது.

Do not separate life from worship.

■ ஒரு கணவன் தன் மனைவியைப் பற்றிச் சொல்லியது:

''ஆலயத்தில் அவள் ஒரு தேவ தூதன்,
சமையலறையிலோ ஒரு பிசாசு!''

நம்மில் பலரது வாழ்வில் இக்கூற்று உண்மையே!
எப்படி வாழ்கிறோம் என்பதிலிருந்தே ஆராதனை துவங்குகிறது —

ரோ 12:1 ... *''உங்கள் உடல்களை ... புத்தியுள்ள ஆராதனை''*

இதன் பொருள் என்ன?

இதற்கான விளக்கம் — ரோ 6:19 ... *''பரிசுத்தத்திற்காக உங்கள் அவயவங்களை ... ஒப்புக்கொடுங்கள்''*

இந்தப் *''பரிசுத்த அலங்காரத்துடன்தான்''* நாம் ஆராதிக்கவேண்டும்—
இது பைபிளில் 3 முறை வருகிறது: 1 நாளா 16:29
சங் 29:2
96:9

■ இப்பரிசுத்தத்தின் மற்றொரு பரிமாணம்
நமது ''சகவுறவுகளைக்'' குறித்தது —

1 தீமோ 2:8 ... *''கோபம் இல்லாமல் ... பரிசுத்த கைகளை உயர்த்தி''*

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்கள் அடிக்கடி சொன்ன செய்தி இதுவே —

ஏசா 1:15 ... *கைகளை விரித்தாலும் ... ஜெபம்பண்ணினாலும் ... கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கின்றன ...*

*''இரத்தம்''* — உறவு சார்ந்த பிரச்னைகள் (வச 17)

''பகைமை'' என்பதுதான் ''கொலை'' —

1 யோ 3:15 ... *சகோதரனைப் பகைக்கிறவன் கொலைகாரன்*

எனவேதான், கடவுளுக்குமுன் **வரும்போது**

ஒப்புரவாகுதல் அத்தியாவசியம் —

மத் 5:21-24 ... *''கொலை, பழிப்பு ... முன்பு ஒப்புரவாகி ...''*

*''தேவனைத் துதிப்பது — மனிதனைச் சபிப்பது''* (யாக் 3:9-11)

ஒருவரோடொருவர் **சமாதானமாயிராமல்**

**பரிசுத்தமாயிருக்க** முடியாது (எபி 12:14)

*கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராவிடில்*

*காணாத தேவனிடம் அன்புகூருவது எப்படி?* (1 யோ 4:20)

இல்லையென்றால், அது ஒரு *''பொய்''*

■ ஞாயிறு கிறிஸ்தவர் — திங்கள் கிறிஸ்தவர்

ஞாயிற்றுக்கிழமைக் கிறிஸ்தவரால் ஆலயம் நிரம்பலாம்; ஆனால் திங்கட்கிழமைக் கிறிஸ்தவரால்தான் சமுதாயத்தில் தாக்கம் ஏற்படுத்த முடியும்.

மத் 5:16 ... ஆராதனை — நற்செயல்கள்

''மார்க்கம் சார்ந்தது'' ''மார்க்கம் சாராதது'' (sacred vs. secular)

என வாழ்வைப் பிரிக்கக்கூடாது.

கிறிஸ்தவனுக்கு ''மார்க்கம் சாராதது'' என்று ஒன்றுமில்லை —

1 கொரி 10:31 ... *புசித்தாலும் ... குடித்தாலும்*

*... எதைச் செய்தாலும் ... ஒருவருக்கும் இடறல் இல்லாது ...*

:33 ...*யூதர்* = பெயர்க் கிறிஸ்தவர்

*கிரேக்கர்* = கிறிஸ்தவரல்லாதோர்

*திருச்சபை* = உண்மைக் கிறிஸ்தவர்

■ இன்று தொழுகையைக் குறித்துப் போதிக்கப்படுமளவு வாழ்க்கையைப் பற்றிப் போதிக்கப்படுவதில்லை;

இயேசுவோ **முதலாவது** ''வாழ்க்கை''

அடுத்துதான் ''தொழுகை'' என்றார் —

(உ-ம்) சமாரியப் பெண்

யோ 4:16-18 ... *உன் கணவனை அழைத்துவா*

:21-24 ... *தொழுகை*

ஆம், பரிசுத்தமே ஆராதனைக்கு அழகு சேர்க்கிறது —

பாடகரின் உடையலங்காரமல்ல ...
இசைக்கருவிகளின் பெருக்கமல்ல ...
ஆராதனையில் பயன்படுத்தப்படும் வியூகங்களல்ல ...
வண்ண வண்ண விளக்குகளல்ல ...

*"**பரிசுத்த அலங்காரத்துடனே** கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்!"*

(சங் 96:9)

- George Herbert (1593-1633) இயற்றிய பாடல் —

*ஏழு நாளும், ஏழில் ஒன்றல்ல,*
*உம்மைத் தொழுவேன், தேவா;*
*விண்ணில் இல்லையேனும், என்னுள்ளில்*
*உம்மை உயர்த்துவேன், தேவா;*
*என் கலைத்திறன் யாவும் திரட்டி,*
*உம்மைப் பாடுவேன், தேவா;*
*என் இதயத்தைப் பிழிந்து*
*ஊற்றுவேன் உம் பாதத்தில்!*

## 7. பொருட்கள், இடங்கள், நபர்களை விக்கிரகமாக்கக்கூடாது.

Do not idolize objects, places or persons.

- பத்துக் கட்டளைகளில் இரண்டாவது —

  யாத் 20:4,5 ... *ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும்* ...

  *''நான்* ***எரிச்சலுள்ள*** *தேவன்''* என்று தேவன் சொல்லும் முதல் இடம் இதுதான்!

  தமது மகிமையை வேறொருவருக்கும் கொடார்!

- பொருட்களை விக்கிரகங்களாக்கக்கூடாது.

  2 இரா 18:4 ... *எசேக்கியா ... வெண்கல சர்ப்பம் ... நொறுக்கினான்*

  சிலுவையின்முன் பணிவதும் சிலை வணக்கம்தான்.

- இடங்களை விக்கிரகங்களாக்கக்கூடாது.

  — சமாரியப் பெண் ''எங்கே'' தொழுதுகொள்ளவேண்டுமெனக் கேட்டாள் ...

  இயேசுவோ ''யாரை'' ''எப்படி'' ஆராதிக்கவேண்டுமெனப் பதிலளித்தார்

  யோ 4:20-24 ... *தேவன் ''ஆவியாய்'' இருக்கிறார்,* திடப்பொருளாய் அல்ல.

  — மறுரூப மலை

  மாற் 9:5-8 ... இடங்களுக்குப் புனிதத்துவம் கிடையாது!

  — சீடர்கள் மேலறையில் ஆலயம் கட்டவில்லை!

- கட்டிடங்களை விக்கிரகங்களாக்கக்கூடாது.

  *தேவன் ஆவியாயிருக்கிறார்;* அவர் ஒரு திடப்பொருளல்ல; அவரை ஓரிடத்தில் நிறுத்தி வைக்க முடியாது.

  — முதல் இரத்தசாட்சி: *''ஆலயங்களில் வாசமாயிரார்''* (அப் 7:48)

  — சாலொமோனே இப்படித்தான் அறிக்கையிட்டான்:

  *''தேவன் பூமியிலே* ***வாசம்****பண்ணுவாரோ?*
  *வானாதி வானங்களும் அவரைக் கொள்ளாதே''* (1 இரா 8:27)

— முதல் சீடன்:

பேதுரு: 1 பேது 2:5

*“**ஜீவனுள்ள** கற்கள் ... ஆவிக்கேற்ற மாளிகை”*

— புதிய எருசலேமில் ஆலயம் இருக்காது

(பழைய எருசலேமில் இருந்தது) (வெளி 21:22)

**இன்று** 2 நாளா 7:15ஐ மேற்கோள் காட்டுவது தவறு; அது பொய்!

அது சாலொமோன் கட்டின தேவாலயத்தை, ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு மட்டும், குறித்தது —

இப்பொழுதோ, *திரைச்சீலை கிழிந்துவிட்டது* (மத் 27:51)

*கிருபாசனத்திற்கு* வழி திறந்தாயிற்று (எபி 4:14-16)

இப்பொழுது, *“இருவர் அல்லது மூவர் என் பெயரால் எங்கே கூடினாலும் ...”* (மத் 18:20)

அன்றைய தேவாலயம் தகர்க்கப்பட தேவன் அனுமதித்தார்!

இன்று —

“பரிசுத்த ஸ்தலம்,” “மகா பரிசுத்த ஸ்தலம்” என்றோ,

“பரிசுத்த ஸ்தலம்,” “பரிசுத்தமற்ற ஸ்தலம்” என்றோ இல்லை.

■ படங்களை விக்கிரகங்களாக்கக்கூடாது.

அப் 17:29 ... *சித்திர வேலை ... தெய்வம் ... நினைக்கலாகாது*

:30 ... அவை *அறியாமையின் காலங்கள்*

இயேசுவின் படங்கள், சொரூபங்கள் பற்றி என்ன?

2 கொரி 5:16 ... *நாங்கள் கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி அப்படி அறிவதில்லை.*

மனந்திரும்பாதோர்க்கும் கிறிஸ்தவரல்லாதோர்க்கும் ஊழியம் செய்யும் சுவிசேஷகர்களை இங்கு மாதிரிகளாய்க் கொள்ளவேண்டாம் —

*“குழந்தையாயிருந்தபோது ... குழந்தையைப்போல யோசித்தேன் ... பெரியவனானபோதோ ...”* (1 கொரி 13:11)

■ மனிதரை விக்கிரகமாக்கக்கூடாது.

அப் 10:25,26 ... *"பேதுருவைக் கொர்நேலியு பணிந்துகொண்டான்."*
பேதுரு: *"எழுந்திரும் ... நானும் மனிதன்தான்!"*

மக்கள் தங்களைத் தொழுவதை விரும்பும் மதத் தலைவர்களால் இந்தியா நிறைந்திருக்கிறது!

இன்று, அரசியல்வாதிகளும் தொழுதுகொள்ளப்பட விரும்புகின்றனர்.

இவையெல்லாம் பேய்த்தனம்.
கிறிஸ்தவத்தில் இந்த வாசனையே வீசக்கூடாது.

■ தூதர்களைத் தொழுதுகொள்ளக்கூடாது.

வெளி 19:10 ... *"தேவனைத் தொழுதுகொள்"*
22:8,9 ... *"தேவனைத் தொழுதுகொள்"*

இவ்வளவு வெளிப்பாடுகளைப் பெற்ற
யோவான் அப்போஸ்தலன்கூட இப்பெரும் தவற்றைச் செய்தான்.

கவனம்!

■ புலனுணர்வு மூலம் "பார்க்கவும்" "அறியவும்" கூடிய தெய்வமே வேண்டுமென்ற மனிதனின் நாட்டமே இஸ்ரவேலர் அவ்வளவாய் விக்கிரகங்களைப் பின்பற்றியதற்கு ஒரு காரணம்.

நாமோ நடக்கவேண்டியது ***"விசுவாசித்து"*** (2 கொரி 5:7);
தொழுதுகொள்ளவேண்டியது ***"ஆவியோடு"*** (யோ 4:24)

## 8. ஒழுங்கும் கிரமமுமின்றி நடந்துகொள்ளக்கூடாது.

Do not act disorderly.

- விடுதலையோடு ஆராதிக்கச் சபைகளில் சொல்லப்படும் வசனம் —

  2 கொரி 3:17 ... *ஆவி எங்கேயோ அங்கே விடுதலை*

ஆவியானவர் நமக்கு ஆராதனையில் விடுதலையைத் தருகிறார்,
உண்மைதான்,
ஆனால் இவ்வசனப் பகுதி இதைக் குறித்துப் பேசவில்லை —

சூழமைவு: வச 14-16 ... *பழைய ஏற்பாடு ... முக்காடு ...*

நாம் கிறிஸ்துவிடம் திரும்பும்போது நியாயப்பிரமாணத்திலிருந்து
எப்படி விடுதலையாக்கப்பட்டோம் என்பதையே
இப்பகுதி பேசுகிறது!

அதாவது, பிரமாணத்திலிருந்து கிருபைக்கு (ரோ 6:14)
*''பிரமாணத்திற்குக் **கீழ்ப்பட்டிராமல்** கிருபைக்கு ...''*

- சில நடைமுறை ஆலோசனைகள் —

  - ☐ சத்தமாய்ப் பாடலாம், ஆனால் விரட்டக்கூடாது!

    சங் 81:1,2 ... *கம்பீரமாய்ப் பாடி ... ஆர்ப்பரியுங்கள் ...*

    வேகமாய்க் கொட்டடித்து மக்களுக்கு வெறியேற்றக்கூடாது;
    அது அஞ்ஞான மார்க்கம்;
    பிசாசுகளை வரவழைக்க அப்படிச் செய்வார்கள்.

    ஏன் ஒரு பாடலின் கடைசி இரு கவிகளை மட்டும்
    திரும்பத் திரும்ப அவ்வளவு வேகமாய்ப் பாடவேண்டும்?

அஞ்ஞான மார்க்கத்திலிருந்து வந்தவர்களுக்குப் பவுலின் திருத்தம்:

1 கொரி 12:2... ***அஞ்ஞானிகள்** ... ஊமையான விக்கிரகங்கள்*

புதிய ஏற்பாட்டுக் கூடுகையில் வரங்களின் செயல்பாடுகளைக்
குறித்து எழுதப்பட்ட 1 கொரி 12, 13 & 14 அத்தியாயங்களின்
துவக்கமே இதுதான்.

போதனையின் இறுதியில் சொல்லப்பட்டது —

14:40 ... *சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் ...*

குறிப்பாக ''நவநாவுகளைக்'' குறித்து அவர்கள் பரவசமடைந்திருந்தனர்.
அர்த்தம் சொல்லப்படாவிடில் சபையில் நவநாவுகளில்
பேசக்கூடாதென்று பவுல் அறிவுறுத்தினான் (14:18-20)

*''10,000 வார்த்தைகள் VS. 5 வார்த்தைகள்''*
*''குழந்தைகளாயிராமல் தேறினவர்களாய்''*

☐ சத்தமிடுவது பற்றி?

நாம் சத்தமிடலாம், ஆனால் அலறக்கூடாது!
சங் 95:1,2 ... *ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்* ...

களிகூருவதும் ***நடுக்கத்தோடுதான்!*** (சங் 2:11ஆ)

சில வட்டாரங்களில்,
சபைக் கூடுகைகளில் கர்ஜித்து, குரைப்பதெல்லாம் இருக்கிறதாம்.

மக்கள் இதை ''ஆவியானவரின் மிருக சத்தங்கள்'' என்கின்றனர்!

நாம் தேவ சாயலில் படைக்கப்பட்டவர்கள்;
**தேவ தூதரைவிடச்** சிறியவர்கள்,
ஆனால் **மிருகங்களைவிட** உயர்ந்தவர்கள்!

சொல்லப்போனால் மிருகத்தைப்போல மாறுவது
தேவனிடமிருந்து வரும் சாபத் தண்டனை —

(உ-ம்) நேபுகாத்நேச்சார் ராஜா (தானி 5:20,21)

☐ உடலின் அசைவுகளுக்குக் *''கட்டுப்பாடு''* தேவை —

*''தீர்க்கருடைய ஆவிகள் அவர்களுக்கு அடங்கி ...''*
(1 கொரி 14:32)

அடுத்த வசனமே —

*''தேவன் கலகத்திற்குத் தேவனல்ல''* (வச 33)

அதாவது, ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் **நாம்** கடைப்பிடிக்காமல்,
ஆவியானவர்மீது பழி சுமத்தக்கூடாது!

குழப்பங்கள் நிறைந்திருந்த கொரிந்து சபைக்கு மட்டுமல்ல
இந்த அறிவுரைகள்—

*''பரிசுத்தவான்களின் சபைகள் எல்லாவற்றிற்கும்''* (வச 33ஆ)

கை தட்டுங்கள் — ஆனால் தாளத்தோடு!
நடனமாடுங்கள் — ஆனால் கண்ணியத்தோடு!
மற்றவர்களையும் மனதில் கொள்ளுங்கள்!

☐ தேவப் பிரசன்னத்தை ''உணருவது'' (feeling) அல்ல,
அதை ''அறிவதுதான்'' (knowing) முக்கியம் —

*''எங்கே இருவர் அல்லது மூவர் ... **நான்** அங்கே!''* (மத் 18:20)

முதலாவது, சத்தியம்
— அடுத்தது, விசுவாசம் —
— உணர்ச்சிகள் கடைசிதான்
(Fact ⏩ Faith ⏩ Feelings)

☐ கலாச்சாரத்தையும் வெகுவாய் மதிக்கவேண்டும் —
கிழக்கத்திய நாடுகளில்:
முக்கியமாக *பணிந்து குனிந்து முழங்கால்படியிட்டு* ... (சங் 95:6)

ஆடவர்போல் பெண்கள் பொதுவாகக் கைகளை
உயர்த்தமாட்டார்கள் (1 தீமோ 2:8)
அடுத்த வசனத்திலேயே ''பெண்களுக்கான'' குறிப்பு இருக்கிறது
பாருங்கள் (வச 9)

ஆனால் மேலை நாடுகளில்:
பெண்கள் தாராளமாய்க் கைகளை உயர்த்தி ஆராதிப்பார்கள்.
புடவை அணியும் இந்தியப் பெண்கள்
அப்படிச் செய்யத் தயங்குவார்கள்.

■ 1 கொரி 12,13 & 14 அத்தியாயங்களில் பவுல் எழுதியவை
அவனுடைய சொந்த அபிப்பிராயங்கள் அல்ல;
அவை கர்த்தருடைய ''கற்பனைகளே'' (1 கொரி 14:37)

கிறிஸ்துவின் சீடராய்,
நாம் அவரது சட்டப் புத்தகத்தையே பின்பற்றவேண்டும்.

## 9. மற்ற ஆராதனை முறைகளைப் பழிக்கக்கூடாது.
Do not decry other forms of worship.

■ சபைகளை இரு பெரும் பிரிவுகளாய்ப் பிரிக்கலாம் —
பெந்தெகொஸ்தேயினர் vs. பெந்தெகொஸ்தேயினரல்லாதவர்

இங்கு அடிப்படையான வேறுபாடு பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ளும் விதத்தில்தான்.

பரிசுத்த ஆவியானவர்தான் ஒருமனப்பாட்டுக் கர்த்தர்;
ஆனால் அவரது செயல்பாடே கிறிஸ்தவர்களின் பிரிவினைக்குக் காரணம் என்பது துக்கம்.

அந்த விவாதத்திற்குள் நாம் இப்பொழுது செல்லவில்லை —
இரு பிரிவினருக்குமே நிறைவுகள், குறைவுகள் உண்டு.

பெந்தெகொஸ்தேயினர் சத்தமாக ஆராதிப்பர்;
பெந்தெகொஸ்தேயினரல்லாதோர் அவ்வளவு சத்தமிடமாட்டார்.

இரண்டிற்குமே பைபிளில் இடமுண்டு —
சங் 46:10 ... *அமர்ந்திருந்து அறிந்துகொள்ளுங்கள்*
47:1 ... *கம்பீர சத்தமாய்ப் பாடுங்கள்*

ராஜாவாகிய சாலொமோன் இரண்டையும் ஒன்றிணைக்கிறான் —
பிர 3:7ஆ ... *மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு ...*
*பேச ஒரு காலமுண்டு*

இரண்டு நிலைகளிலும் தேவனால் செயல்பட முடியும் —
(உ-ம்) யோபு 38:1 ... *பெருங்காற்றிலிருந்து கர்த்தர்*
1 இரா 19:11,12 ...*அமர்ந்த மெல்லிய சத்தம்*

தேவன் ஏகாதிபத்தியர்;
நமக்குப் பிரியமான பாணிக்கேற்ப அவரைக் கட்டுப்படுத்த முடியாது!

— உடற்பாவனைகள் (உ-ம் — சங்கீதப் புத்தகம்)

*பணிந்து ... முழங்கால்படியிட்டு ... கரங்களை உயர்த்தி ...*

*கை தட்டி ... நடனமாடி ... முகங்குப்புற விழுந்து ...*

■ ஆராதனை முறையில் இவ்விரு குழுவினரிடையேயுள்ள மற்றுமொரு வேறுபாடு —

ஜெபப் புத்தக முறை vs. சொந்தப் பாணி

— ஜெபப் புத்தக ஆராதனையில் கருத்துச் செறிவு அதிகம்.
பாடல்களும் பல்வேறு சத்தியங்களை உள்ளடக்கியவை.

— சொந்தப் பாணியில், உணர்த்தப்படுகிறபடி, ஏறெடுக்கப்படும் ஆராதனையில் புதுமையும் தன்னியல்பும் நிறைந்திருக்கும்.

எனது சாட்சி:

எனது ஆங்கிலிக்கன் பின்னணி —
*''பொதுவான ஜெபப் புத்தகத்திலிருந்து''*
அநேக ஜெபங்களையும், ஆராதனைப் பகுதிகளையும்
நான் மனனம் செய்திருக்கிறேன் —
''பொதுவான'' அப்புத்தகத்தில் ''சிறப்பான'' ஜெபங்கள் உண்டு!

1963இல் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டேன்.
இதனால் நான் ஏற்கனவே படித்திருந்தவை, பயிற்சித்திருந்தவை
அழிந்துவிடவில்லை; ஆனால் எனக்குப் புதிய பரிமாணமும்
அர்த்தங்களும் உற்சாகமும் கிடைத்தன!

''இதுவா அதுவா'' என்றல்ல, இரண்டுமே தேவை!
குளிப்பாட்டிய தண்ணீரோடு
பிள்ளையையும் எறிந்துவிடுவதில்லையே!

■ பாமாலைகள் vs. பல்லவிகள் (hymns vs. choruses)

பாமாலைகளில் பல எழுப்புதலின் காலக்கட்டத்தில் எழுதப்பட்டவை—

(உ-ம்) சார்லஸ் வெஸ்லி (ஜான் வெஸ்லி) 17ஆம் நூற்றாண்டு
ஐரா சாங்கி (D. L. மூடி) 18ஆம் நூற்றாண்டு

இவர்கள் இயற்றியவை ''தியானச் செறிவு'' மட்டுமல்ல,
''உபதேசக் கருத்தும்'' நிறைந்தவை —

(உ-ம்) பிஷப் ரெஜினால்டு ஹீபர் (1783-1826) எழுதிய பாமாலை —

*தூய, தூய, தூயா! சர்வ வல்ல நாதா!*
*தேவரீர்க்கெந்நாளும் சங்கீதம் ஏறுமே;*
*தூய, தூய, தூயா! மூவரான ஏகா!*
*காருண்யரே, தூய திரியேகரே!*

■ இங்கு ஒரு கேள்வி எழலாம் —

நாம் புதுப்பாட்டுத்தானே பாடவேண்டும்?
''புதுப்பாட்டு'' என்பது எதைக் குறிக்கிறது?

சங் 40:2,3 ... "*பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்தது*"
— ''பழைய'' வாழ்க்கையை வேறுபடுத்திக் காட்டவே

வெளி 5:9,10 ... கிறிஸ்துவுக்குள் ... *எல்லாம் புதிதாயின;*
— நமது நிலையைக் கொண்டாடவே (2 கொரி 5:17)

அதாவது, ''பழைய'' அல்லது தூஷண வார்த்தைகளல்ல!

''காலக்கட்டத்தை'' வைத்துப் ''பழைய'' பாடல்கள், ''புதிய'' பாடல்கள் என்றால், சங்கீதப் புத்தகத்தை இன்று நாம் பயன்படுத்த முடியாதே; அவை யாவும் பழைய பாடல்கள்தானே?
எபிரெயரின் பாடல் புத்தகம் அதுதானே?

இவை எல்லாவற்றையும் இணைத்துப் பயன்படுத்த
வேதம் நம்மை அழைக்கிறது — எபே 5:19

*சங்கீதங்கள்:* ... ஆங்கிலிக்கன் ஆராதனையில் பாடுவதுபோல
*பாமாலை, கீர்த்தனை:* ... செய்யுள் நடைப் பாடல்கள்
*ஞானப்பாட்டுகள்:* ... இன்று வெளிவரும் பல்லவிகள், பாடல்கள்

■ இன்னொரு காரியம் —

சபையில் *''முதியோரும்''* உண்டு; *''இளைஞரும்''* உண்டு;
எல்லாரும் கர்த்தரைத் துதிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் —

*''வாலிபரே, கன்னியரே, முதியவரே, பிள்ளைகளே''* (சங் 148:12)

கிட்டார் மற்றும் மத்தளக் கருவிகளோடு வேகமாய்ப் பாடுவதை வாலிபர் விரும்புவர்; முதியோரோ ஆர்மோனியம் அல்லது பியானோவுடன் நிதானமாய்ப் பாட விரும்புவர்.

முதியோரின் ரசனையை வாலிபர் மதிக்கவேண்டும்;
முதியோரும் வாலிபரை அசட்டை செய்யக்கூடாது.

ஒரு சாரார் அடுத்தவருக்கு இடம் கொடுக்கவேண்டும்.

சிறுவரின் *ஓசன்னா* முழக்கத்தைக் கேட்டு
ஆசாரியரும் வேதபாரகரும் கோபமடைந்தபோது,
இயேசு சிறு பிள்ளைகளுக்கே ஆதரவாய்ப் பேசினார் —

மத் 21:15,16 ... *குழந்தைகள் ... பாலகர் ... துதி நிறைவாகச் செய்தீர்*

நமது தேவன் பல விதங்களின் தேவன்!
வேறுபாடுகளில்தான் அழகு!

## 10. ஆராதனையின் மறுபக்கத்தை மறந்துவிடக்கூடாது.

Do not ignore the other side of worship.

- வார்த்தைகளினால் தேவனைத் துதிப்பது ஆராதனையின் ஒரு பக்கம்தான்; ஆராதனையின் மறுபக்கமாக பலவிதச் செயல்பாடுகளை பைபிள் நமக்குக் காண்பிக்கிறது —

### (அ) தாராள தானதர்மம்

எபி 13:15,16 ... *ஸ்தோத்திர பலி ... நன்மை ... தானதர்மம்*

ஆசாரியனும் லேவியனும், குற்றுயிராயிருந்தவனைவிட, தங்களது ஆலயக் கடமைகளையே முக்கியமாகக் கருதினர் (லூக் 10:30-37)

எளியவர் மீது அக்கறை:

☐ இயேசு — *சிறியவராகிய ... இவர்களில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்*

''ஏழைகளின் தேவன்!'' (மத் 25:40)

☐ அன்னை தெரசாவின் உந்துவிசை

''நாதியற்றோருக்கும் துன்புறுவோருக்கும் நான் செய்வது என் தேவனுக்குச் செய்வதாம்!''

### (ஆ) அள்ளிக் கொடுக்கும் காணிக்கை

இரு எடுத்துக்காட்டுகள்:

☐ முதிர் வயது வரை பிள்ளையற்றிருந்தவன்:
ஆபிரகாம்: ஆதி 22:5 ... *''தொழுதுகொண்டு''*

☐ நெடுங்காலமாய்ப் பிள்ளையற்றிருந்தவள்:
அன்னாள்: 1 சாமு 1:27,28...*''கொடுக்கிறேன்... பணிந்தாள்''*

இத்தியாகச் செயலைத் தொடர்ந்துதான் அவ்வளவு நேர்த்தியான துதிபாடல் அவளது உள்ளத்திலிருந்து பிறந்தது (1 சாமு 2:1-10).

உங்களுக்கு அருமையான எதையாவது குறித்துச் சிந்தியுங்கள்: நகையோ ... சொத்தோ ... வேலையோ .... சொகுசோ ...

மரியாளுக்கு ஓராண்டு வருமானத்தில் வாங்கிய தைலம்!
— *வீண் செலவல்ல,* அதுதான் ஆராதனை!
அவளது காணிக்கையின் நறுமணத்தில் இயேசு அகமகிழ்ந்தார்!
(மத் 26:6-13)

### (இ) பொறுமையாய்ப் பாடனுபவித்தல்

1 பேது 4:14 ... *கிறிஸ்துவுக்காய் நிந்தனை ... மகிமைப்படுகிறார்*
எனவேதான் பவுலும் சீலாவும், அடித்துச் சிறையலடைக்கப்பட்ட போதும், தேவனைத் துதிக்கத் துவங்கினர் — அப் 16:23-25

| | |
|---|---|
| அங்கலாய்ப்பை ஆராதனையாக்குங்கள் | (worry ⏩ worship) |
| சிறையிருப்பைத் துதியாக்குங்கள் | (prison ⏩ praise) |
| சங்கிலிகளைச் சிங்கிகளாக்குங்கள் | (chains ⏩ cymbals) |

பல சிறந்த துதி பாமாலைகள் பரிசுத்தவான்கள் படுத்த படுக்கையாயிருக்கும்போது பிறந்தவையே —

(உ-ம்) டோனாவூர் ஏமி கார்மைக்கேல் அம்மையார் (1861-1951)
கீழே விழுந்ததினால் 20 ஆண்டு படுக்கை.
அப்பொழுதுதான் அநேக கவிதைகள் எழுதினார்கள் —

ஒரு கவிதை:

*''உம்மிடம் ஒன்றையே நாடினேன், தேவா;*
*அதையே தேடுவேன்; உம் வீடே எனது இல்லம்!''*

1951இல் அவர்களது மரணத்தை அறிவிக்க ஆலயமணியோசை இசைத்த பாடல் இதுவே.

துன்புறும்போது உலகம் தேவனைச் சபிக்கிறது;
துன்புறும்போது பரிசுத்தவான்களோ தேவனைப் போற்றுவர்.

(உ-ம்) யோபுவின் மனைவி vs. யோபு (யோபு 1:20,21; 2:9)

### (ஈ) தினசரிக் கடமைகள்

கொலோ 3:16 ... *கிறிஸ்துவின் வசனம் ... பக்தியுடன் பாடி*
:17 ... *வார்த்தை ... செயல்*

ஞாயிறு மட்டுமல்ல, திங்கள் முதல் சனி வரை
தொழிலையே தொழுகையாக்குவோம்!

■ **முடிவுரை**

இந்த 10 பாடங்களையும் தொகுத்துக் கூறும் மேற்கோள் ஒன்றைத் தேடினேன் —

பிஷப் வில்லியம் டெம்பிள் (1881-1944) எழுதியதில் அதைக் கண்டுபிடித்தேன் —

உண்மையான ஆராதனை என்பது —

- ☐ தேவனது **பரிசுத்தத்தினால் மனசாட்சியை** உயிர்ப்பிக்கும்
- ☐ தேவனது **சத்தியத்தினால் சிந்தையைப்** போஷிப்பிக்கும்
- ☐ தேவனது **அழகினால் கற்பனையைத்** தூய்மையாக்கும்
- ☐ தேவனது **அன்புக்கு இருதயத்தைத்** திறந்துவிடும்
- ☐ தேவனது **நோக்கத்திற்காய் சுய சித்தத்தை** அர்ப்பணிக்கும்

அதாவது, ‘‘நமது அனைத்தும்,
அவரது அனைத்துமாய் மாறவேண்டும்!’’

சங்கீதக்காரன் சொன்னதின் பொருள் இதுதான்:

*‘‘என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி ...*
***என் முழு உள்ளமே,***
அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி!’’
(சங் 103:1)